1971 டிசம்பர் 18]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தச் சீரணிப் படையினர் நகராட்சிப் பகுதிகளிலும் பணிபுரிகின்ற வாய்ப்பை உருவாக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : தலைவரவர்களே, உறுப்பினரின் யோசனை சந்தர்ப்பம் வரும்போது பரிசீலிக்கப்படும்.

State Social Welfare Board

* 564 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to divert funds to the State Social Welfare Board, for distribution to private agencies ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (ஆ) மாநில சமூகநல வாரியத்தின் வேண்டுகோளின்படி அரசு, 1971-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் தானே முன்வந்து சமூக நலத் தொண்டு செய்யும் ஐந்து நிறுவனங்களுக்கு ரூபாய் 5,000 (ஐயாயிரம்) மானியமாக வழங்குவதற்கு வாரியத்திற்கு ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது.

கோவை மாவட்ட மலைப்பகுதி மக்கள்

* **565 வினா—திரு. ஈ. எம். நடராசன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டம், மலைப்பகுதியில் உள்ள மலைஜாதி மக்களுக்கு அரசு இதுவரை என்னென்ன நன்மைகள் செய்துள்ளது ?

(இ) அவர்களில், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கேட்கப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவரவர்களே, பவானி வட்டத்தின் பர்கூர் மலைப்பகுதியில் இருக்கின்ற மலைசாதி மக்களுக்காக இதுவரை கல்வி, வீடு, இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற வசதிகளெல்லாம் அளிக்கப்படவில்லை. ஆகவே, அரசு அதைப் பரிசீலனை செய்து, பர்கூர் மலைப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு வசதி செய்ய முயற்சி செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

@ 120-122-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

[1971 டிசம்பர் 18

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இணைப்புச் சாலைகள், கருவிகள், உபகரணங்கள் வழங்குதல், குடிநீர் வசதி, கல்வி, கூட்டுறவு சங்கங்கள், வேளாண்மை, உழவுமாடுகள், வீடுகள் வழங்குதல் ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல் அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றைத் தவிர மேலும் என்ன வசதிகள் செய்யவேண்டும் என்று உறுப்பினர் விரும்புகிறார் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் கோவை மாவட்டத்தைப்பற்றி இருக்கவேண்டும். வடாற்காடு மாவட்டத்தைப்பற்றிக் கேட்கக்கூடாது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த மலைப் பகுதியில் உள்ள மலைசாதி மாணவர்களுக்குப் போதுமான சத்துணவு கொடுக்கவும், உடைகள் வழங்கவும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, சத்துணவுத் திட்டத்தின்கீழ் மலைவாழ் மாணவர்களுக்கும் சேர்த்து சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் கம்பளிகளும் தரப்படுகின்றன. நலத்துறை மூலம் நடத்தப்படும் பள்ளிகளில் கம்பளியும் தரப்படுகிறது.

இனும் நிலங்கள்

** 566* வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை சட்டம் 26/63 Tamil Nalu Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1963 மடங்கள், ஆதீனங்கள் இவைகளுக்கு நஞ்சை புஞ்சை நிலங்கள் சம்பந்தமாக நேரடி அனுபோகம் தேவையில்லை என்று தொடர்ந்து விதி விலக்கு அளிப்பதற்குக் காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்து சமய நிறுவனங்கள். சம்பந்தப்பட்ட கோட்டத் துணை ஆணையாளரின் இசைவினைப் பெறுமல் பண்ணைச் சாகுபடி செய்யக் கூடாது என்று இந்து சமய அறக்கட்டளைகள் துறை பிறப்பித்த விதிகள் தடைசெய்கின்றன. எனவே, அவர்கள் சொந்தமாகப் பயிர் செய்வதற்கு முற்றிலும் தடை செய்யப்படுகிறது. இது, இந்து சமய நிறுவனங்களுக்கு மிகுந்த இடர்பாடு விளைவித்தது. அவர்கள் செய்துகொண்ட முறையீட்டின் மேல், ரயத்துவாரிப் பட்டாக்களைப் பெறுவதற்காக, சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடி அந்த நிறுவனங்கள் சொந்தச் சாகுபடி செய்துள்ளனவாவென்று நிரூபிக்க வேண்டுமென்கிற நிபந்தனையிலிருந்து அவற்றிற்கு விலக்களித்து, அரசு. 1966-ல் திருத்தச் சட்டம் ஒன்றை (தமிழ் நாடு சட்டம் 27/1966) இயற்றியது.